# பிரதம மந்திரி பாதுகாப்பு காப்பீடு திட்டம்(PMSBY)

## கோரும் முறைகள்

1) இத்திட்டத்தின் கீழ் காப்பீட்டு தொகையினை கோருவதற்கு, விபத்து ஏற்பட்ட உடன் பாலிசிதாரரோ/நியமனதாரர்(பாலிசிதாரர் இறந்துவிட்ட நிலையில்) பாலிசிதாரர் பாலிசி தொகையானது எந்த வங்கிக்கிளையில் தன்னிச்சையாக அவரது வங்கிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டதோ அவ்வங்கிக்கிளையினை பாலிசிதாரரோ/அல்லது பாலிசிதாரர் இறந்துவிட்ட நிலையில் அவரது நியமனதாரரோ அணுகி கோரிக்கை படிவத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

2) இந்த கோரிக்கை படிவத்தினை மேற்படி வங்கிக் கிளையிலோ, அல்லது வேறு எந்த ஒரு நியமிககப்பட்ட அலுவலகங்களாகிய காப்பீட்டு நிறுவனக் கிளைகள், மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், கிளை மையங்கள், காப்பீட்டு முகவர்கள் அல்லது நியமிக்கப்பட்ட இணையதளங்கள் உட்பட, எவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். சம்மந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் இக்கோரிக்கை படிவம் மேற்குறிப்பிட்ட அனைத்து இடங்களிலும் தாராளமாக கிடைக்கும் வகையில் உறுதிசெய்ய வேண்டும். மேற்படி படிவமானது கேட்கும் எந்த ஒரு நபருக்கும் மறுக்கப்படக் கூடாது,

3) இக்கோரிக்கை மனுவினை பாலிசிதாரரோ அல்லது கோரிக்கைக்கேற்றவாறு அவரது நியமனதாரரோ விபத்து ஏற்பட்ட 30 நாட்களுக்குள் இம்மனுவினை முழுமையாக பூர்த்தி செய்து சம்மந்தப்பட்ட வங்கிக் கிளையில் சமர்பிக்க வேண்டும்.

4) கோருரிமை மனுவுடன் பாலிசிதாரர் இறக்கும் பட்சத்தில், அசல் முதல் தகவல் அறிக்கை, பஞ்சநாமா, பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறப்பு சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும். பாலிசிதாரருக்கு நிரநதர ஊனம் ஏற்படும் பட்சத்தில் கோருரிமை மனுவுடன் அசல் முதல் தகவல் அறிக்கை, பஞ்சநாமா, மற்றும் அரசு மருத்துவரிடமிருந்து பெற்ற இயலாமை சான்று இணைக்கப்படவேண்டும். மேலும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள விடுவிப்பு சான்றும் பாலிசிதாரர்/நியமனதாரர் இணைக்கபடவேண்டும்.

5) அங்கீகரிக்கப்பட்ட வங்கி அதிகாரி மேற்படி வங்கிக்கணக்கு/பாலிசி பிரிமியம் தொகை கழிக்கப்பட்ட விவரங்களை சரிபார்த்து மேலும் வங்கிக கணக்கு, நியமனதாரர் உத்தரவு, பாலிசி பிரிமியம் கழிக்கப்பட்ட விவரம்/ பாலிசி தொகை காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட விவரம் ஆகியவற்றை சரிபார்த்து பாலிசிதாரர்/ நியமனதாரர் கோரிக்கை மனுவில் கொடுத்த தகவல்களின் உண்மைநிலையினை அறிந்து சான்றளித்து காப்பீட்டு நிறுவனத்திடம் கோரிக்கை மனுவினை பெற்ற 30 நாட்களுக்குள் அனுப்பவேண்டும்.

6) காப்பீட்டு நிறுவனம் மேற்படி பிரிமியம் செலுத்தப்பட்ட விவரத்தினை சரிபார்த்து, பாலிசிதாரரின் பெயர் பிரதான காப்பீட்டு ஆவணப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது என்பதை உறுதி செய்யவேண்டும்.

7) கோரிக்கை மனுவினை பிரதான காப்பீட்டினை வழங்கிய காப்பீடு நிறுவனம் 30 நாட்களுக்குள் பரிசீலித்து மேற்படி வங்கிக்கு அனுப்பவேண்டும்.

8) ஒப்புக்கொள்ளப்பட்ட கோரிக்கை தொகையானது பாலிசிதாரர் அல்லது அவரது நியமனதாரரின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும்.

9) பாலிசிதாரர் எந்த ஒரு நியமனதாரரையும் நியமிக்காத பட்சத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட தொகையானது பாலசிதாரரின் சட்டபூர்வமான வாரிசுகளுக்கு தகுந்த நீதிமன்றம்/அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட வாரிசு இறங்குரிமை சான்றிதழ்/ வாரிசுரிமைச் சான்றிதழ் சமர்பிக்கும் பட்சத்தில் வழங்கப்படும்

10) சரிபார்க்கப்பட்ட கோரிக்கைமனுவினை வங்கி காப்பீட்டு நிறுனத்திடம் அனுப்புவதற்கான கால அவகாசம் 30 நாட்கள் ஆகும். மேலும் அவ்வாறு வங்கி அனுப்பிய கோரிக்கை மனுவினை காப்பீட்டு நிறுவனம் பரிசீலனை செய்து அங்கீகரித்த தொகையினை பைசல் செய்ய காலஅவகாசம் 30 நாட்கள் ஆகும்.

*********